**www.stopabortionsavelive.com**



அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன். மானிடராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா - இது கவிமணி தேசீய விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல். ஆம், இன்று நீங்களும் நானும் இந்த உலகத்தில் உயிருடன் வாழ்ந்து கொண்டிக்கிறோம் என்றால் அதற்கு முக்கிய காரணம் நம்மை உருவாக்கிய இறைவனும் நம்மை ஈன்று, நாம் இந்த உலகைக் காண அனுமதி அளித்த நமது பெற்றோர்களும் ஆவர். இன்றைய நாகரீக உலகில் கருவுற்ற பின் “இந்த குழந்தை எங்களுக்கு தேவையற்ற குழந்தை” என்று கூறி கருச் சிதைவு செய்து கொள்ளும் தம்பதியர்களே அதிகம். அவ்வாறிருக்க, ஒரு வேளை நமது தாயும் தந்தையும் கூட நம்மை வேண்டாத குழந்தை என்று நினைந்திருந்தால், கருவை சிதைத்து கருவிலேயே நம்மை அழித்து இருந்தால் இன்று நீங்களும் நானும் எங்கு இருப்போம்? சிந்தித்துப் பார்த்தது உண்டா?

நமது அன்றாட வாழ்வில், இயற்கையின் சீற்றத்தால் அல்லது இயற்கையாக ஏற்படுகின்ற தவறுகளின் காரணமாக எண்ணற்ற மக்கள் கொல்லப்பட்டு அழிவதை நாள் இதழள்களின் வாயிலாக வாசித்து அறிகிறோம். நாமும் பெரும்பாலும் அவர்களது ஆன்மா சாந்தியடைய வீதிகளிலும், மைதானங்களிலும், பொது இடங்களிலும் இரங்கல் கூட்டங்களை நடத்தியும், மலர்கள் தூவியும், தீபங்கள் ஏற்றியும் மௌன அஞ்சலி செலுத்துவதுண்டு. நல்லதுதான். இது வரவேற்கப் பட வேண்டிய ஒன்று தான். ஆனால் செயற்கையாக முழு மனதோடு, தெரிந்தே கொல்லப்படுகின்ற

உயிர்களுக்காக எப்போதாவது ஒரு முறையாகிலும் இரங்கல் தெரிவித்திருப்போமா? அல்லது நினைத்துதான் பார்த்திருப்போமா? நாம் வாழும் இந்தியாவின் கணக்குகளின் அடிப்படையில் ஒரு வருடத்தில் 11 மில்லியன் கருச்சிதைவுகள் நடைபெறுகின்றன. கருச்சிதைவு செய்து கொள்வதின் காரணமாக வருடத்திற்கு 20000 பெண்கள் மரணத்தை தழுவுகின்றனர். இந்த கணக்குகள் எல்லாம் சராசரியாக மருத்துவ மனைகளில் நடைபெறுபவற்றின் எண்ணிக்கை ஆகும். அவ்வாறெனில், உண்மையாகவே வெளி உலகிற்கு அறியப்படமால் நிகழ்த்தப்படும் கருச்சிதைவுகளின் கணக்குகள் எவ்வளவு மடங்காக இருக்கும் என்பதை நீங்களே ஊகித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

உலக அளவில் பாாத்தோமேயானால் ஒரு வருடம் 210 மில்லியன் பெண்கள் கருத்தறிக்கின்றனர் என்று கணக்குகள் கூறுகின்றன. இவற்றில் 75 மில்லியன் கருத்தரிப்புகள் தேவையற்றதாக கருதப்படுகின்றன. 40 முதல் 50 மில்லியன் பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்கின்றனர். ஒருவரது உடலில் உயிர் உள்ளதா இல்லையா என்பதை தீர்மானம் செய்ய உதவும் காரணங்களில் ஒன்று இதய துடிப்புதான். இதய துடிப்பு உண்டு என்றால் அந்த நபர் உயிருடன் இருக்கிறார் என்பது பொருள். இதே இதய துடிப்புதான் கருத்தரிக்கப்பகின்ற குழந்தையிலும் கருத்தரிக்கப பெற்ற நிமிடம் முதல் காணப்படுகின்றது. அதாவது கருதரிக்கப்பட்ட நிமிடம் முதல் கருவாக இருக்கும் குழந்தை உயிருடன் உள்ளது என்பது பொருள். அம்மாவின் கருவறையிலுள்ள அத்தகைய காணமுடியாமல், பேசமுடியாமல், எதிர்த்துப் போராட முடியாமல் துடிதுடிக்கும் குழந்தையின் உயிரை கருச்சிதைவு என்ற பெயரால் கொல்வது நியாயமா? இது கொலையல்லவா? அக்குழந்தைக்கு இம்மண்ணில் வந்து பிறக்க உரிமையில்லையா? ஒரு தாயோ அல்லது தந்தையோ அல்லது உறவினர்களோ கருவிலிருக்கும் குழந்தையைக் கொல்ல உரிமையுள்ளவர்களாக முடியுமா?

எனது இந்த வெப்சைட்டின் முக்கிய குறிக்கோள் எல்லா கருச்சிதைவுகளையும் நிறுத்த முடியவில்லையென்றாலும், கருச்சிதைவுக்கு உடன்படுவோரின் எண்ணிக்கையையாவது ஒரு கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்பதால்தான். இதற்கான முயற்சியில் பங்கு பெற நல் மனம் கொண்ட

உங்கள் ஒவ்வொருவரையும் ஆவலுடன் அழைக்கிறேன். ஜாதி, மத பேதமின்றி இந்த தீய சக்தியை எதிர்த்துப் போராட வாருங்கள்.

இறுதியாக விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு நூலில் உள்ள பத்து கட்டளைகளில் 5ஆம் கட்டளையாகிய “கொலை செய்யாதே” என்ற இறைவனின் கட்டளையையும், திருபாடல்கள் பகுதியில் 126 ஆம் பாடலில் கூறப்பட்டுள்ள “மக்கட்பேறு இறைவனின் நன்கொடை, வயிற்றின் கனி ஒரு வெகுமதியே” என்ற உண்மையையும் உங்கள் நினைவக்க கொண்டு வந்து, மீண்டும் ஒரு முறை வாழ்த்துக்களை கூறி விடை பெறுகிறேன். வாழ்க வையகம். வளர்க மனித நேயம். நன்றி. வணக்கம்.